


சீர்மிகு சிறுவை முருகன் வழிபாட்டுப் பலன்கள்

சிறுவை முருகன் திருமணப் பிரசாதம்

வெகுதான்ய ஆண்டு, சித்திரைத் திங்கள், 20ஆம் நாள் (3-5-1998) ஞாயிற்றுக் கிழமை சுப யோகங்கள் நிறைந்த சுப தினத்தில் நிகழ்ந்த

வள்ளி கல்யாணப் பெருமான்

திருமண மகோத்ஸவப் பெருவிழாவில் கலந்து கொண்டு

மனத்தில், நினைவில், சிந்தையில், தன் சிறுவை முருகனை குடி கொண்டு இருக்கும் அடியவர்கள் முன்னிலையில், முருகனின் திருவருட் பிரசாதமாக இந்நூல் வெளியிடப்படுகிறது.

S. நாச்சியப்பன்

மயிலை சிறுவாபுரி பிரார்த்தனைக் குழு

இந்நூலுக்கு நன்கொடை : ரூ.3-00

நூலின் மூலம் வரும் நன்கொடை சிறுவாபுரி கோவிலில் நடக்கும் திருப்பணி - உத்சவம் போன்றவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

சென்னை பேசிம் பாலத்தில் இருந்து தடம் எண் 133 என்ற பஸ் சிறுவாபுரி வழியாக பெரியபாளையம் செல்கிறது. காலை 5-45 - 12-45, மாலை 5-45 நேரங்களில் பேருந்து உள்ளது. கும்முடிப்பூண்டி பஸ்ஸில் தோரண வாயில் (புதூர் கூட்ரோடு) இறங்கினால் 3 கிலோ மீட்டர் நடக்க வேண்டி இருக்கும். தடம் எண் 131, 131எ, 132, 133எ பஸ்ஸில் வந்தால் அகரம் என்ற இடத்தில் இறங்கி 1 கிலோ மீட்டார் தூரம் நடந்தால் கோவில் வந்து சேரலாம்.

சீர்மிகு சிறுவை முருகன் வழிபாட்டுப் பலன்கள்

கலியுகத்தில் பேசும் முருகன்
வரம் மிகுந்த பெருமாள்

"தரும மிகு சென்னை இது" என்பர் சான்றோர்.

காரணம்? புராணங்களில் 'மயிலாபுரி' எனவும், சிவ புராணத்தில் 'கபாலீச்சரம்' எனவும் சொல்லப்பட்ட மயிலாப்பூர் ஒரு காரணம். அவதார புருஷராகிய பேயாழ்வார் தோன்றியும், அவர் வேண்டுகோளுக்கு இணங்கி எழுந்தருளிய ஆதிகேசவப் பெருமாள் மயூரபுரிவாசி (மயிலாப்பூர்) ஆனதும் ஒரு காரணம். எங்கோ நடந்த குருசேத்திர யுத்தத்தின் நினைவாக பார்த்தனுக்கு சாரதியான பார்த்தசாரதிப் பெருமாள் எழுந்தருளியுள்ள "அல்லிக்கேணி" என ஆழ்வார்களால் பாடப் பெற்ற திருவல்லிக்கேணி ஒரு காரணம். திருமழிசை ஆழ்வார் வேண்டுகோளுக்கு இணங்கி ஜகந்நாதப் பெருமாள் காட்சி தந்த திருமழிசை ஒரு காரணம். சில நூற்றாண்டுகட்கு முன், தானே விரும்பி முத்துக்குமார சுவாமி திருப்போரூரில் இருந்து கந்த கோட்டம் குடியேறியது ஒரு காரணம். சிவ புராணத்தில் நஞ்சுண்ட அமுதை சிவபெருமான் உண்டு, நஞ்சு பிரிக்கும் போது, சிவபெருமான் முகம் நஞ்சால் நீலமாக, பார்வதிப் பிராட்டி சிவபிரானின் கழுத்தில் நஞ்சை நிறுத்தி திருநீலகண்டராக்க, பிரதோச வேளையில் நந்தி கேசுவரர் நஞ்சை நக்கி எடுக்க, எம்பெருமான் அனந்த சயனமாகச் சுருண்டு பள்ளி கொண்ட 'சுருட்டைப்பள்ளி' ஒரு காரணம். நஞ்சு பிரித்த அமுதை, தேவர் இருந்து உண்டு தேவேந்திரப் பட்டணம் குடியேறக் காரணமான சிறுவாபுரி ஒரு காரணம். சைவ சித்தாந்த வாதிகளுக்கும், வைணவ சித்தாந்த வாதிகளுக்கும், கௌமாரச் சித்தாந்த வாதிகளுக்கும் 'எழுமூர்' என்று முன் அழைக்கப்பட்ட தற்போதைய சென்னை, தருமமிகு சென்னை ஆனது.

'தொண்டை நாடு சான்றோர் உடைத்து' என்ற சொல்லுக்குச் சான்றாக, சேக்கிழார் பெருமான், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருவள்ளுவர் போன்றோர் தோன்றினர். தொண்டை வள நாட்டில் தருமமிகு சென்னைக்கு வடமேற்கே சென்னை - கல்கத்தா

நெடுஞ்சாலையில் (NH5ல்) சென்னையில் இருந்து 33-வது கிலோ மீட்டரில் இடது பக்கம் (மேற்கே) பிரியும் சாலையில் சிறுவாபுரி பாலசுப்ரமணிய சுவாமியின் தோரண வாயில் (நுழைவாயில்), நம்மை வரவேற்கிறது. இந்தத் தோரண வாயிலில் இருந்து மேற்கே 3 கிலோ மீட்டர் தொலைவில் 'சின்னம்பேடு' எனத் தற்போது அழைக்கப்படும் சிறுவாபுரி பாலசுப்ரமணியப் பெருமான் ஆலயம் அமைந்துள்ளது.

நுழைவாயிலைக் கடந்து ஆலயம் நோக்கிச் செல்கையில், சாலையின் இரு பக்கமும் பசுமையான நிலங்கள், வீசியாடும் நெற்கதிர்கள், குலுங்கிக் குலை தள்ளி ஆடும் வாழைத் தோப்புகள். இந்தக் கடும் கோடையிலும் கால்வாய் எங்கும் நீர் நிரம்பி ஓடுகிறது. வளமான கிராமம். செல்வச் செழிப்பு ஒவ்வொருவரின் முகத்திலும் தெரிகிறது. கிராமத்தின் நுழைவில் செல்லியம்மன் கோவில், நடுநாயகமாக அகத்தீஸ்வரர் கோவில், மேற்கே பெருமாள் கோவில், பெருமாள் கோவிலுக்குப் பின்னால் விஷ்ணு, துர்க்கை கோவில்கள். வடக்கே வாயு மூலையில் சிறுவாபுரி பாலசுப்ரமணிய சுவாமி ஆலயம் கம்பீரமாக நம் கண்ணுக்குக் காட்சி தருகிறது. ராமர் கோவில், விநாயகர் கோவில், ஜைனர் 22-வது தீர்த்தகாரர் கோவில் என, கோவில்கள் பல இருப்பதை, அருணகிரிநாதர், **"ஆடகம்பயில் கோபுரம் மாமதில் ஆலயம் பலவீதியுமே நிறைவான தென்சிறுவாபுரி"** எனத் திருப்புகழில் பாடியுள்ளார்.

சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி கோவில் ராஜகோபுரம் 5 நிலைகளுடன் கம்பீரமாக 'வருக வருக!' எனக் கட்டியம் கூறி நம்மை வரவேற்கிறது 'ஐம்பொறிகளையும், ஐம்பூதங்களையும் அடக்கு, அடக்கு! என ராஜகோபுரம் நம்மிடம் கூறுவது போல் உள்ளது உயரமான கொடிமரம், கொடிமரத்துக்கு முன்னால் அழகே திருஉருவம் கொண்டது போல் மரகதப் பச்சையில் மயில் கொலுவாக வீற்று இருக்கிறது. இது போல் சிறந்த வடிவமைப்புள்ள மரகத மயில் அகில உலகிலும் வேறு எங்கும் இல்லை என உறுதியாகக் கூறலாம்.

1993ல் கும்பாபிடேகம் செய்தபோது பிரதிஷ்டை செய்யப்பட்ட புதிய மயில் அழகுக்கு அழகு சேர்க்க

மரகதக் கல்லில் சூரியனார் ஒளி வீசிக்கொண்டு இருக்க, நேர் எதிரில் கிழக்கே திருமுகம் கொண்ட கம்பீரமான ராஜ கணபதி மரகதக் கல்லில் பச்சைப் பசேல் என மின்னிட 'மரகத விநாயகர்' என்ற நாமகரணத்துடன் வேண்டுவதை அளிக்க, அழகுக் கோலத்துடன் வீற்று இருக்கிறார். பின் பிராகாரத்தில் சண்டிகேஸ்வரர், ஆதிமூலர் (முன் இருந்த பால சுப்ரமணிய சுவாமியின் விக்கிரகம்), நாகர், சேத்திர பாலகர், நவக்கிரகம் என, பரிவார தேவதைகள் புடைசூழ சிறுவாபுரி பால சுப்ரமணிய சுவாமி காட்சி தருகிறார். இங்கு நவக்கிரகம் ஒன்பதும் வாகனத்துடன் இருப்பது சிறப்பாகும். சந்ததமும் அடியார் சிந்தையில் குடியிருக்கும் முருகப் பெருமான், நம் சிந்தையைக் கவர்கிறார். கலியுகத்தில் பேசும் கடவுளான பாலசுப்ரமணியப் பெருமானின் அருட்பார்வை நம்மை நோக்கிப் பாய்ந்து வர, சிறுவை மேவி வரம் மிகுந்த பெருமான் நாம் வேண்டும் வரங்களை அள்ளி அள்ளித் தர, உடலும் உள்ளமும் லேசாகி மிதந்து வர, நம்மை நாம் இழந்து அவன் திருவடிகளில் சரணாகிறோம். ஆகம சார சொரூபன், சேவல மாமயில் பிரிதன், தேவ சேனாதிபதி, தண்தரள மணிமார்பன், தண்தமிழ் மிகு நேயன், சந்ததமும் அடியார் சிந்தையில் குடி கொண்டவன், செம்பொன் எழில் சொரூபன், புண்டரிக விழியாளன், தேவேந்திரன் மகள் மணவாளானின் முன் வலது கரம் அடியவருக்கு அபயம் அளிக்க, பின் வலக்கரம் ஜப மாலை ஏந்தி இருக்க, முன் இடக்கரம் இடுப்பிலும், பின் இடக்கரம் கமண்டலமும் தாங்கி, பிரம்ம சாஸ்தா கோலத்தில் காட்சி அளிக்கிறார். பிரம்மனைத் தண்டித்து பிரம்மனின் படைத்தல் தொழிலை ஏற்றுக் கொண்ட கோலம் கொண்ட முருகப் பெருமானை வணங்கினால் வித்தைகள் பல கற்ற பேரறிஞர் ஆவர் என, **"புந்திநிறை அறிவாள"** என அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியுள்ளார்.

முன் மண்டபத்தில் அருணகிரிநாதர் சிறுவை பாலசுப்ரமணியப் பெருமானை மைந்து மயிலுடன் ஆடிவரக் கண்ட பெருமிதத்துடன் திருப்புகழ் பாடி நிற்கிறார்.

முருகப் பெருமானுக்குத் தெற்கே அண்ணாமலையார் மரகதப் பச்சையில் கரும்பச்சை வைரம் போல் பிரகாச

ஜோதியாகக் காட்சி அளிக்கிறார். இத்துணை பெரிய மரகதலிங்கம் வேறு எங்கும் இல்லை.

அருணகிரிநாதர் திருவண்ணாமலைக்கு **'மயிலுமாடி நீ வரவேணும்'** என்று பாடியதற்கு இணையாக, இங்கு **'மைந்துமயில் உடன் ஆடிவர வேணும்'** எனப் பாடி உள்ளதால் ,அண்ணாமலையாரும் உண்ணாமுலை அம்மையும் இங்கு எழுந்தருளி இருக்கிறார்கள். அருணாசலேசுவரர், அபிதகுஜாம்பிகை (உண்ணாமுலை) இருவருக்கும் நடுவே அற்புதத் தோற்றமாய், 'நாணம், பயிர்ப்புடன் வள்ளி நங்கை மணவாளப் பெருமான் முருகனைக் கைத்தலம் பற்றும் காட்சியாய் எழுந்தருளியிருக்கிறார். கைத்தலம் பற்றுகின்ற பொழுது இயற்கையாய்ப் பெண்ணுக்கு ஏற்படும் கூச்சம், நாணம், பயிர்ப்பு காரணமாக வள்ளி ஒரு கால் கெந்திய நிலையில் லேசாக முன் சாய்ந்து, ஒரு கண் மூடிய நிலையில் நிற்கின்ற கோலம் காணக் கண் கோடி வேண்டும். பின் புறத்திலிருந்து நோக்கும் பொழுது வள்ளி கள்ளத்தனமாக அரைக்கண் பார்வையாக முருகனை நோக்குவது போல் சிற்பி சிலையை வடித்திருக்கிறார். மிக நேர்த்தியான வேலைப்பாடு. இது போன்ற சிலை வடிவம் வேறு எங்கும் இல்லை. சிற்பமாக வள்ளிமலையில் இருக்கும் கோலத்தை, சிலை வடிவமாக இங்கு அமைத்து இருப்பது மிகச் சிறப்பானது. வள்ளிமணவாளப் பெருமான் அழகு காணக் கண் கோடி வேண்டும்.

இங்குள்ள விக்கிரகங்களில் பாலசுப்ரமணியசுவாமி, ஆதிமூலர், நவக்கிரகம் தவிர மற்ற விக்கிரகங்கள் பச்சைக் கல்லில் செய்யப்பட்டவை. முருகன் சிலை கூட முன்பு மரகதப் பச்சைக் கல்லில் இருந்து காலப்போக்கில் பின் திருவப்பட்டபோது கருங்கல்லில் செய்யப்பட்டிருக்கலாம். இது போல் எல்லா விக்கிரகங்களும் மரகதப் பச்சைக் கல்லில் உள்ளது போல் வேறு எந்தக் கோவிலிலும் இல்லை.

அருணகிரிநாதர் நான்கு திருப்புகழ்களை இந்த ஸ்தலத்துக்குப் பாடியுள்ளார். அருணகிரிநாதர் பாடிய 10000 திருப்புகழ்களில் நம் கைக்குக் கிடைத்து இருப்பவை 1330

திருப்புகழ்கள்தாம். அவற்றுள் 224 ஸ்தலங்களைப் பாடியுள்ளார் அருணகிரிநாதர். திருப்புகழ் பாடல் பெற்ற ஸ்தலங்களில் 9 இடங்கள் இதுவரை கண்டறியப்படாமல் இருக்கின்றன. கண்டறியப்பட்ட 215 ஸ்தலங்களில் 35 ஸ்தலங்களைச் சிறப்பாகப் பாடியுள்ளார். 8 ஸ்தலங்களில் 4 திருப்புகழ் பாடி இருக்கிறார். 6 ஸ்தலங்களுக்கு அர்ச்சனைத் திருப்புகழ் பாடியுள்ளார். திருப்புகழில் பாடும் நாயகனாக முருகன் இல்லாமல் 6 பாடல்களில் பாடும் நாயகனாக விநாயகப் பெருமானைப் பாடியுள்ளார். மேற்கண்ட திருப்புகழின் ஆய்வின்படி 6 அர்ச்சனைத் திருப்புகழில் ஒன்றாக சிறுவைக்கு **"சீதளவாரிஜ பாதா நமோ நம"** என ஒரு பாடலுடன் நான்கு திருப்புகழ் பாடிய 8 ஸ்தலங்களில் ஒன்றாக சிறுவையும், 35 சிறப்புத் திருப்புகழ் ஸ்தலங்களில் ஒன்றாக சிறுவையும் அமைந்து இருப்பது சிறப்பு. **'அண்டர்பதி குடியேற'** என்ற முதல் திருப்புகழில் **மகிமீற, மகிழ்கூர, மகிழ்வாக, மகிழ்கூற, இன்பமுற** என ஐந்து இடங்களில் கூறப்பட்டது போல் வேறு எந்தத் திருப் புகழிலும் இத்துணை சிறப்பாக, ஐந்து முறை சொல்லப்பட வில்லை என்பது இன்னும் ஒரு சிறப்பு. இந்தத் திருப் புகழின் ஈற்றடியின் கடைசியில் சொற்கள் ஒரு வாக்கிய மாகப் பொருள்பட அமைந்து இருப்பதும் ஓர் அரிய சிறப் பாகும். **'அருளாலே', 'மகிழ்வாக', 'எதிர்காண', 'வரவேணும்', 'உயர்தோளா', 'வடிவேலா', 'முருகேசா', 'பெருமாளே!'** என ஒரு வாக்கியமாகப் பொருள்பட அமைவது போல், வேறு எந்த ஒரு திருப்புகழிலும் அமையவில்லை.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்த ஸ்தலத் துக்குக் கடுமையான விரதமாகப் பசி பட்டினி இருந்து நோன்பு நோற்று இறைவனை அடைய வேண்டியதில்லை. **"சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியான தண் சிறுவை தனில் மேவு பெருமாளே!"** "எப்போதும் நினைத்தாலே போதும் என்கின்ற அளவுக்கு, அடியவர்க்கு எளிமையாக முருகன் எழுந்தருளி வருவார்" எனக் கூறுகிறார் அருணகிரிநாதர்.

இரண்டாவது திருப்புகழ் அர்ச்சனைத் திருப்புகழாக இருப்பது சிறப்பு. பழநிக்கு "நாதவிந்து கலாதி நமோ நம"

எனவும், சிறுவைக்கு **"சீதள வாரிஜ பாதா! நமோ நம"** எனவும் அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

அர்ச்சனைத் திருப்புகழ் 6ல் சரணாகதியின் மேன்மையான முருகனின் பாத சரணத்தைக் குறித்து சிறுவைக்கு எழுதி இருப்பது சிறப்பு. **"வானவர் ஊரினும் வீறாகிலீறளகாபுரி வாழ்வினும் மேலாக திருவாழ் சிறுவாபுரி வாழ்வே சுராதிபர் பெருமாளே"** எனப் பாடி, "இங்கு வருபவர்கள் தேவேந்திரப் பட்டணத்தைக் காட்டிலும் வளமாக வாழ்வர்" என அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்கிறார். மூன்றாவது திருப்புகழில் மானிடப் பிறப்பின் துன்பம் எல்லாம் நீக்கித் தருகிறார் அருணகிரிநாதர்.

நான்காவது திருப்புகழில் **"ஜெயமதான நகர்"** என்று, "சிறுவையே வெற்றி கொண்ட நகரம்" என்கிறார். **"ஜெயமதானநகர் அளகை போல வளமிகுந்த சிறுவைமேவி வரமிகுந்த பெருமாளே"** என, "வெற்றியைத் தன்னிடம் அமைத்துக் கொண்ட சிறுவை நகரம், 'குபேரப் பட்டணம்' என அழைக்கப்பட்ட அளகாபுரி போல் எல்லா வளங்களும் அதிகமாகக் குடி கொண்டுள்ள சிறுவாபுரியில் குடிகொண்டு உள்ள சிறுவை முருகன் வரம் அதிகம் தன்னிடம் இருப்பு உள்ளவன்" என அருணகிரிநாதர் சொல்வது, "வரமிகுந்தவனை அடிக்கடி நாடி வந்து அவனிடம் இருப்புள்ள வரங்களைப் பெற்றுச் செல்ல வாருங்கள், வாருங்கள்!" என அழைப்பது போல உள்ளது. தருதல், கொடுத்தல், அளித்தல் என்பதைக் காட்டிலும் அழிவே இல்லாத சிறப்பைத் தரும் வரம் மேன்மை மிக்கது அல்லவா?"

திருப்புகழ் நான்கினையும், அவற்றின் பொருள் விளக்கங்களையும், இனி உய்த்து உணர விழைவோம்

சிறுவைத் திருப்புகழ் நான்கு

அருணகிரிநாதர் சிறுவை முருகனைப் போற்றிப் பாடி இருக்கும் நான்கு திருப்புகழையும், அவற்றின் பொருள் விளக்கத்தையும், மறை பொருளாகச் சொல்லி இருக்கும் பிரார்த்தனைகளையும் நாம் பயன்பெறும் முறைகளையும் கீழே கொடுத்துள்ளேன்.

வேண்டுவன தரும் திருப்புகழ்

அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ்மீற அருளாலே

அந்தரியொ(டு) உடனாடு சங்கரனும் மகிழ்கூர
ஐங்கரனும் உமையாளும் மகிழ்வாக

மண்டலமும் முனிவோரும் எண்திசையில் உளபேரும்
மஞ்சினனும் அயனாரும் எதிர்காண

மங்கையுடன் அரிதானும் இன்பமுற மகிழ்கூற
மைந்துமயி லுடனாடி வரவேணும்

புண்டரிக விழியாளா! அண்டர்மகள் மணவாளா!
புந்திநிறை அறிவாளா! உயர்தோளா!

பொங்குகட லுடன் நாகம் விண்டுவரை இகல்சாடு
பொன்பரவு கதிர்வீசு வடிவேலா

தண்தரள மணிமார்ப! செம்பொன்எழில் செறிரூப!
தண்தமிழின் மிகுநேய முருகேசா

சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியான
தண்சிறுவை தனில்மேவு. பெருமாளே!

"தேவர்களின் தலைவன் இந்திரன் தேவலோகம், பொன்னுலகம் குடியேறவும், இந்திர பதவி பெறவும், படை வீரர்களான அசுரர்கள் உருமாறி சேவல் கொடியாகவும், மயிலாகவும் மாறி வர, தேவர்கள் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் இருக்க அருளிய சிறுவை முருகனே!. எனக்குக் குடி இருக்கச் சிறந்த வீட்டையும் (வேண்டுபவர் பெண்ணாக இருந்தால் சிறந்த மணவாளனைத் தரும்படி வேண்டிக் கொள்ள வேண்டும்), என் எதிரிகளை எனக்கு அடங்கியவராக மாற்றித் தந்து, இந்திர பதவியை இந்திரனுக்குத் தந்தது போல் எனக்குச் சிறந்த உயர்வான தொழிலைத் தந்து, என் அக வாழ்வை தேவர்களுக்கு அளித்தது போல் பேரின்பப் பெறு வீடான மோட்சத்தை எனக்கு அருள் முருகா!" என மனத்தில் வேண்டிக்கொண்டு முதல் இரண்டு அடிகளைப் படிக்க வேண்டும்.

"காளியுடன் மிக மகிழ்வாக ஆடிய சங்கரனும், மகிழ்ச்சியாக ஐந்துகரத்தான் விநாயகனுடன் பார்வதிப் பிராட்டியும் களிப்பாக இருப்பது போல் என் குடும்பம் ஆமோதம் (மிக மகிழ்ச்சி) கொண்டு வாழ அருள்வாய் முருகா!" என வேண்டி, அடுத்த இரண்டு அடிகளைப் படிக்கவும்.

"இப்பூவுலகில் உள்ளவர்களும், முனிவர்களும், எட்டுத்திக்கில் (திசையில்) உள்ளவர்களும், இந்திரனும், பிரம்மனும் எதிர்நின்று காணவும்,

"அலர்மேலு மங்கையுடன் திருமாலும் இன்பத்துடன் மகிழ்வாக இருப்பதை மாந்தரிடம் எடுத்துச் சொல்ல சிறுவை முருகன். வலிமை நிறைந்த அழகு மயிலேறி, என்னை நாடி ஆடி வரவேணும். என்னைச் சுற்றி உள்ளவர்களும், சுற்றத்தாரும், நண்பர்களும், இறையன்பர்களும், சான்றோரும், சாதுக்களும், பெருந்தனக்காரர்களும் புகழும்படி நான் வாழ வேண்டும்"

என வேண்டி அடுத்த நான்கு வரிகளைப் படிக்க வேண்டும்.

"கமலக்கண்களை (தாமரைக்கண்) உடையவனே! தேவர்கள் வளர்த்த தெய்வயானை - தேவசேனையின் மணவாளப் பெருமானே! ஞானம் நிறைந்த அறிவு உடையவனே! அசுரர்களை வென்ற உயர்ந்த புயங்களை உடையவனே! கிரௌஞ்ச கிரியை (ஏழு கிரிகள்) வலிமையான வேலால் பாய்ந்து அழித்த பொன்னொளி கதிர்வீசும் வடிவேலனே! என்னுடைய (1) **இடர்கள், (2) கஷ்டங்கள், (3) நஷ்டங்கள், (4) தேக்கங்கள், (5) தடங்கல்கள், (6) வில்லங்கங்கள், (7) விக்கினங்கள்** ஆகிய 7 கிரிகளைத் தகர்த்து நல்ல உயர்வான, மதி நுட்பமான சிகரமான புத்தி உடையவனாக என்னை ஆக்கி என் குடும்பத்துடன் நிறைவாக வாழச் செய்!" என வேண்டி அடுத்த நான்கு அடிகளைப் படிக்க வேண்டும்.

"குளிர்ந்த முத்துமணி மாலை அணிந்த அழகிய மார்பு உடையவனே! செம்பொன்னைப் போல் பளபளப்பான மின்னிடும் அழகு நிறைந்த உருவமுடையவனே! தொன்மை வாய்ந்த குளிர்ந்த நல்ல தமிழின் மீது மிகுந்த காதல் (விருப்பம்) கொண்ட முருகப் பெருமானே! எப்போதும் உன் அடியவர் எண்ணியபோது (சிந்தனையில்) நினைப்பில் குடியிருக்கும் குளிர்ந்த சிறுவை (சிறுவைபுரி)யில் குடியிருக்கும் முருகனே! நான் உன்னை சிறுவை பாலசுப்ரமணியா என்று எண்ணியபோது என் நினைப்பில் குடி அமர்ந்து, எனைச் சீராக்கிச் சிறப்புறச் செய்ய மயிலின் மேல் ஏறி ஆடி வந்து அருள்புரிக!" என வேண்டி, முதல் திருப்புகழின் கடைசி நான்கு வரிகளைப் படிக்கவும்.

இந்தத் திருப்புகழைப் பொருள் புரிந்து மனமுருக ஒருநிலைப்படுத்தி, "சிறுவைக் கோனே! பாலசுப்ரமணிப் பெருமானே!" என வேண்டிட, ஐந்து பலன்களைத் தருகிறார். (1) **இம்மையில் வீடு, பெண்களுக்குத் திருமணமாகிக் கணவன் வீடு, (2) தொழில், (3) சிறந்த குடும்பம், (4) செல்வம், (5) மோட்சம்** என ஐந்து பலன்களை ஐந்து விதமான மகிழ்வை, நமக்குத் தருகிறார்.

இது போல் ஐந்து பலன்களையும் நாலு மகிழ்வு, ஓர் இன்பம் எனக் கூறப்பட்ட திருப்புகழ், இந்தத் திருப்புகழ் மட்டும் தான் என்பது சிறுவையின் சிறப்பு. இந்தத் திருப்புகழின் ஈற்றடியின் கடைசி வார்த்தைகள், அருளாலே, மகிழ்வாக, எதிர்காண, வரவேணும், உயர்தோளா, வடிவேலா, முருகேசா, பெருமாளே எனப் பொருள்பட ஒரு வாக்கியமாக அமைந்துள்ளது போல் வேறு எந்த திருப்புகழிலும் வரவில்லை! "முருகா! உன்னை எதிர்காண நான் வர வேணும்! நிறைந்த மகிழ்வை எனக்கு அருளிடு!" எனப் பொருள்படும்படி இந்த எட்டுச் சொற்கள் அமைந்து இருப்பது சிறப்பு.

அர்ச்சனைத் திருப்புகழ்

சீதள வாரிஜ பாதா! நமோநம
நாரத கீத விநோதா நமோநம
சேவல மாமயில் ப்ரீதா! நமோநம மறைதேடுஞ்

சேகரமான ப்ரதாபா! நமோநம
ஆகம சார சொரூபா நமோநம
தேவர்கள் சேனை மகீபா! நமோநம கதிதோயப்

பாதக நீவுகுடாரா! நமோநம
மாவசு ரேசர்க டோரா! நமோநம
பாரினி லேஜய வீரா! நமோநம மலைமாது

பார்வதி யாள்தரு பாலா! நமோநம
நாவல ஞான மனோலா! நமோநம
பால குமார சுவாமி! நமோநம அருள்தாராய்

போதக மாமுகன் நேரான சோதர
நீறணி வேணியர் நேயா! ப்ரபாகர
பூமக ளாமரு கேசா மகோததி இகல்சூரா

போதக மாமறை ஞானா! தயாகர!
தேனவிழ் நீபநறா வாரு மார்பகா
பூரண மாமதி போல்ஆறு மாமுகா! முருகேசா

மாதவர் தேவர்க ளோடேமு ராரியும்
மாமலர் மீதுறை வேதாவு மேபுகழ்
மாநிலம் ஏழினும் மேலான நாயக! வடிவேலா

வானவர் ஊரினும் வீறாகி வீறள
காபுரி வாழ்வினு மேலாக வேதிரு
வாழ்சிறு வாபுரி வாழ்வே! சுராதிபர் பெருமாளே.

"முருகா! குளிர்ந்த தாமரை போன்ற திருவடிகளை உடையவனே! உன்னைப் பணிந்து வணங்குகிறேன், வணங்குகிறேன்!. இசையில் சிறந்த நாரத முனிவருடைய கீர்த்தனங்களில் மகிழ்ச்சி கொள்பவனே! உன்னைப் பணிந்து வணங்குகிறேன்! வணங்குகிறேன், சேவற் கொடியோனே! காலாயுதக் கடவுள் ஆனவனே! உயர்ந்த அழகான மயில் மீது விருப்பமுள்ளவனே! உன்னை வணங்குகிறேன், வணங்குகிறேன்! தேவர்களின் சேனாதிபதியே! அரசே! உன்னை வணங்குகிறேன், வணங்குகிறேன்! நற்கதி அடையும் பொருட்டு கொடும் பாதகத்தைப் பிளக்கின்ற கோடரியே! உன்னை வணங்குகிறேன், வணங்குகிறேன்!

"பெரிய அசுரர் தலைவர்கள் உன்னைக் கண்டு அஞ்சும்படியான உக்ரம் காட்டும் பராக்கிரமசாலியே! உன்னை வணங்குகிறேன், வணங்குகிறேன்! இவ்வுலகில் வெற்றி வீரனாக விளங்குபவனே! உன்னை வணங்குகிறேன், வணங்குகிறேன்! பர்வத புத்திரி என புகழப் பெற்ற இமாலய மலையின் பெண்ணான பார்வதி தேவி பெற்ற குமாரனே! உன்னை வணங்குகிறேன், வணங்குகிறேன்! எந்தன் மனத்தில் என்றும் ஞான உலாக் கொள்பவனே! உன்னை வணங்குகிறேன், வணங்குகிறேன்! பிரம்ம சாஸ்தா கோலத்தில் சிறுவையில் குடிகொண்டு இருக்கும் பாலசுப்ரமணிய ஸ்வாமியே! உன்னை வணங்குகிறேன், வணங்குகிறேன்! உந்தன் கருணையை, திருவருளைத் தந்தருள்க.

"யானையின் அழகிய பெரிய முகத்தைக் கொண்ட விநாயகப் பெருமானின் இளைய சகோதரனே! திருநீறு அணிந்த சடையர்களான முனிவர்களின் அன்பனே! தாமரையில் மலர்ந்த இலக்குமி தேவியின் மருமகனே! ஈசனே! கடலைப் பகைத்த சூரனே! உபதேசத்துக்கு உகந்த திருமறை - வேதங்களின் தலைவனே! பிரம்மனுக்கு உபதேசம் செய்த கிருபைக்கு இருப்பிடமானவனே! தேன் வழியும் கடம்ப மாலையின் நறுமணம் கமழும் மார்பினை உடையவனே! அழகிய பௌர்ணமி முழுநிலாப் போல அழகான சிறந்த ஆறு மாமுகங்களை உடையவனே! முருகேசா! கடுமையான தவமிருக்கும் முனிவர்கள், தேவர்கள், திருமால், தாமரை மலர் மேல் வீற்றிருக்கும் பிரம்மன் - இவர்கள் புகழும் நாயகனே! முருகனே! பெரிதான ஏழு உலகுக்கும் தலைவனாக விளங்குபவனே! வடிவேலவனே! தேவர்களின் ஊரான இந்திர லோகத்துக்கும் மேலாக குபேரனின் பட்டணமான 'குபேரபுரி' என்ற அளகாபுரியின் வாழ்வினும் மேம்பட்டதாக வாழ்ந்து வரும் சிறுவாபுரியின் வாழ்வே உயர்ந்தது. தேவர்களின் தலைவனான இந்திரனுக்குப் பெருமானே!"

இந்த அர்ச்சனைத் திருப்புகழைப் படிக்கும் போது மேற்கண்ட பொருளை உணர்ந்து "நமோ, நம!" எனச் சொல்லும்போது, மலர்களை சிறுவை பாலசுப்ரமணியத்தின் திருவடிகளில் சமர்ப்பிக்க வேண்டும். முதல் பன்னிரண்டு அடிகளில் அர்ச்சனைத் திருப்புகழ் முடிந்து முருகப் பெருமானின் பராக்கிரமம், அழகு, உறவு, சிறுவையின் செல்வச் சிறப்பு ஆகியவை பின் பன்னிரண்டு அடிகளில் சொல்லப் படுகிறது. இந்த வரிகளைப் படிக்கும் போது முருகனை உணர்ந்து வேண்டி, மேன்மையான சிறுவை இலக்குமியின் செல்வத்தைச் பெறப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

தீயவை நீக்கும் திருப்புகழ்

வேல்இ ரண்டெனு நீள்விழி மாதர்கள்
காதலின் பொருள் மேவினை பாதகர்
வீணில் விண்டுள நாடிய ருண்மைகள் விலைகூறி

வேளை யென்பதி லாவசை பேசியர்
வேசி என்பவ ராமிசை மோகிகள்
மீது நெஞ்சழி ஆசையி லேஉழல் சிறியேனும்

மால யன்புர ளார்இமை யோர்முனி
வோர் புரந்தரன் ஆதிய ரேதொழு
மாத வம்பெறு தாளினை யேதின மறவாதே

வாழ்த ருஞ்சிவ போகந னுநெறி
யேவி ரும்பி வினாவுட னேதொழ
வாழ்வ ரந்தரு வாய்அடி யேன்இடர் களைவாயே

நீல சுந்தரி கோமளி யாமளி
நாட கம்புயில் நாரணி பூரணி
நீடு பஞ்சமி சூலினி மாலினி உமைகாளி

நேயர் பங்கெழு மாதவி யாள்சிவ
காம சுந்தரி யேதரு பாலக!
நீர்பெரு ருஞ்சடை யாரருள் தேசிக! முருகேசா

ஆலில் நின்றுல கோர்நிலை யேபெற
மாநில ங்கள் எலாநிலை யேதரு
ஆய னந்திரு வூரக மால்திரு மருகோனே

ஆட கம்பயில் கோபுர மாமதில்
ஆல யம்பல வீதியு மேநிறை
வான தென்சிறு வாபுரி மேவிய பெருமாளே.

"வேல் போன்ற இரண்டு நீண்ட கண்களை உடைய பெண்கள், ஆசையுடன் பொருளை விருப்பம் கொண்டவர்கள், வீணாகப் பகைமை கொண்டு ஊமை போல்

இருப்பவர்கள், அவர்களையே விலை பேசி நேரம் காலம் பார்க்காமல் ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டு பழிச் சொற்களை அள்ளி வீசுபவர்கள், பரத்தையர், மோக இசையில் பிரியம் கொள்பவர், விலைமாதர் மீது மோக முற்று அழியும் ஆசையில் சுற்றித் திரிகின்ற சிறுவனாகிய நான், நல்ல புத்தி பெற்று திருமால், பிரம்மா, தேவர், முனிவர்கள், இந்திரன் யாவரும் வணங்கும்படியான மகா தவத்தைப் பெற்ற உன் பொற் பாதங்களை, திருவடிகளை நாளும் மறவாமல், சிவ தத்துவத்தை விளக்கும் நல்ல சிறந்த நூல்களில் கூறியபடி நல்ல உயர்ந்த வாழ்வை விரும்பி ஆராய்ந்து, நல்ல அறிவுடன் உன்னைத் தினம் வணங்கி வாழும் வரத்தை அருள்வாய். அடியவன் என் இடர்களை, கஷ்டங்களை, துயர்களை நீக்கி அருள்வாயாக!

"நீல நிற அழகியே! இளமை நிறைந்தவளே! பச்சை நிறத்தை உடையவளே! கூத்துக்கள் பல நடத்தும் இளம் நங்கையே! முற்றும் நிறைந்தவளே! ஐந்தாவது சக்தியே! திரிசூல தாரியே! மாலை அணிந்தவளே! உமையவளே! காளியே! சிவனார் அன்புக்கு உகந்த உமையொரு பாகமானவளே! சிவகாம சுந்தரியே!" எனப் போற்றப் படும் உலக நாயகி தந்த பாலகனே! கங்கை நீர் தங்கி இருக்கும் பெருஞ்சடை உடைய சிவபிரான் பெற்ற குருமூர்த்தியே! முருகேசனே!

"ஆலிலையில் இருந்தபடியே இப்புவியில் உள்ளோர் யாவரும் நிலையான வாழ்வு பெற்று, பெரிய ஏழு உலகங்களும் நிலை பெற்று விளக்கவும் உலகைக் காக்கின்ற இடைக்குலத்துத் திருமால்-திருவூரகம் என்னும் தலத்தில் விளங்கும் திருமால் மருகோனே! உயர்ந்த தங்கத்தால் (ஆடகம்) வேயப்பட்ட கோபுரங்களையும், பெரிய மதில்களையும் உடைய கோவில்களும் பல வீதிகளும் நிறைந்து உள்ள அழகிய தென் சிறுவாபுரியில் வீற்றிருக்கும் முருகப் பெருமானே!"

இந்தத் திருப்புகழை ஓதும்போது, இன்றையச் சூழலில் நமக்குள்ள இடர்கள், கஷ்டங்கள், தேக்கங்கள், தடங்கல்கள்,

வில்லங்கங்கள், விக்கினங்கள், நஷ்டங்களை நினைவில் கொண்டு முருகப் பெருமானைப் பிரார்த்தித்து, துன்பம் நீக்கித் தர வேண்ட வேண்டும்.

வரம் தரும் திருப்புகழ்

பிறவி யான சடமி றங்கி வழியி லாத துறைசெ றிந்து
பிணிக ளான துயர்உ ழன்று தடுமாறிப்

பெருகு தீயவினையி னொந்து கதிகள்தோறு மலைபொருந்தி
பிடிப டாத ஜனன நம்பி அழியாதே

நறைவி ழாத மலர்மு கந்த அரிய மோன வழிதிறந்த
நளின பாதம் எனது சிந்தை அகலாதே

நரர்சு ராதி யரும்வ ணங்கும் இனிய சேவைதனை விரும்பி
நல ன்தாத அடியன் என்று பெறுவேனோ

பொறிவ ழாத முனிவர் தங்கள் நெறிவழாத பிலனுழன்று
பொருநி சாச ரனைநி னைந்து வினைநாடிப்

பொருவி லாமல் அருள்புரிந்து மயிலின் ஏறி நொடியில் வந்து
புளக மேவ தமிழ்பு னைந்த முருகோனே

சிறுவ ராகி இருவர் அந்த கரிபதாதிகொடுபொருஞ் சொல்
சிலைஇ ராமன் உடன்எ திர்ந்து சமராடிச்

செயம தான நகர்அ மர்ந்த அளகை போல வளமி குந்த
சிறுவை மேவி வரமி குந்த பெருமாளே.

"பிறப்பு, இறப்பு என்ற நியதிகளுக்கு உட்பட்ட வாழ்க்கையில் தீய வழிகளில் நடந்து நோய் முதலான துக்கங்களில் வேதனைப் பட்டுத் தடுமாறி, பெருகிய தீய வினைகளினால் மனம் நொந்து கஷ்டப்பட்டு, ஒவ்வொரு பிறப்பின் போதும் அடையும் துயரங்களையும், அதன் கன்மைகளையும் கண்டு அறிய முடியாது, பிறப்பினை

விரும்பி அழிந்து போகாமல், தேன் நீங்காத மலர் போன்ற முகத்தில் அரிய அழகிய மோன விழியைத் திறந்து காட்டி, அழகிய நளினமான உன் பாதம் எனது நினைப்பில் என்றும் அகலாமல், மனிதர்களும், இந்திரனும் வணங்குகிற இனிமையான தரிசனத்தை விரும்பி நன்மை பெறும் படியான பாக்கியத்தை அடியேன் என்று பெறுவேனோ?

குகையில் சிறைப்பட்டு ஐம்பொறிகளும் தவறான வழிகளில் போகாதபடி காத்து, நக்கீர முனிவர் மனவேதனை அடைந்து இருந்தபோது ஒப்பில்லாத வகையில் அருள் புரிந்து மயிலின் மீது ஏறி வந்து ஒரு நொடிப் பொழுதில் பெருமைப்படத்தக்க திருமுருகாற்றுப் படை என்னும் தமிழ்மாலையை மகிழ்வுடன் ஏற்று அணிந்து கொண்ட முருகனே!

"சீதாபிராட்டியை கொடுஞ்சொல்லால் கானகத்துக்கு அனுப்பிய, வில்லேந்திய இராமனை, சிறுவரான இலவ-குசலவர் இருவரும், யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை இவற்றுடன் வந்த போது, எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொண்ட நகரமாக ஆக்கிய சிறுவை - குபேரப்பட்டணமான அளகாபுரி போல எல்லா வளங்களும் மிகுந்துள்ள இந்தச் சிறுவையில் வீற்று இருந்து வரங்களை நிரம்ப இருப்பு வைத்துள்ள பெருமானே! முருகோனே! எனக்கு வேண்டிய வரங்களை அருள்வாய் முருகா!" என்று வேண்டிட வேண்டும்.

ஸ்தல புராணம்

சிறுவைக்கு வடமேற்கே 28 கிலோ மீட்டர் தொலைவில் "சுருட்டைப் பள்ளி" என்ற ஒரு கிராமம், ஊத்துக்கோட்டைக்கு வடக்கே உள்ளது. சிவபெருமான் சுருண்டு பள்ளி கொண்ட இடம் என்பதால் 'சுருட்டைப் பள்ளி' என அழைக்கப்படுகிறது. வேறு எங்கும் சிவபெருமானுக்குக் கிடந்த திருக்கோலம் இல்லை. நஞ்சு உண்ட அமுதை நஞ்சு பிரிக்க தேவர்கள் சிவபெருமானிடம் கொடுக்க, நஞ்சு பிரிக்கும் போது சிவபெருமானின் முகம் நீலமாக, நஞ்சை கழுத்தில் பார்வதிப் பிராட்டி நிறுத்தி திருநீலகண்டராக்கிட, பிரதோஷ வேளையில் நந்திகேஸ்வரர் நஞ்சை நக்கி எடுக்க, நஞ்சு பிரிந்த அமுதை தேவர்கள் இருந்து உண்ட இடம் சிறுவாபுரி எனவும், தேவர்கள் குடியேற உதவிய முருகன் எனவும் அருணகிரிநாதர் திருப்புகழில் **"அண்டர்பதி குடியேற மண்டசுரர் உரு மாற"** எனப் பாடியுள்ளார்.

"சிறுவராகி இருவர் கரிபதாதி கொடுஞ்சொல் சிலை இராமன் உடன் எதிர்த்து ஜெயமதான நகர்" என்ற திருப்புகழில் இருந்து இராமனின் அசுவத்தைக் கட்டிய இடம் சிறுவை எனவும், லவன் குசன் போரிட்டு வென்ற இடம் என்பதும் புலனாகும். இராமாயணத்தில் குசலபுரி எனச் சொல்லப்பட்ட பகுதி சென்னை கோயம்பேடு முதல் ஆரணி (பெரியபாளையம்) வரை உள்ள பகுதி. குடியிருந்த பகுதி குசலபுரியாகவும், தவமிருந்த பகுதி ஆரண்யம் (ஆரணி) என்பதும், போர் புரிந்த பகுதி சிறுவாபுரி (சின்னம்பேடு) என்பதும் தெளிவாகும்.

ஊரின் பெயர் கூட காரணப் பெயராக அமைந்துள்ளது.

சின்ன + அம்பு + பேடு = சின்னம்பேடு
சிறுவர் + அம்பு + எடு = சிறுவரம்பேடு (சின்னம்பெடு)
சிறுவர் + போர் + புரிந்த = சிறுவாபுரி, சிறுவர்புரி

'பேடு' என்பது அம்பு வைக்கும் கூடு என்பதால், 'சின்னம்பேடு' என்ற பெயரே தற்போது நிலைத்து உள்ளது.

சேய்த் தொண்டர் புராணத்தில் சேக்கிழார் முருகம்மையார் எனப் போற்றிப் புகழ் பாடியுள்ள முருகம்மை வாழ்ந்த இடம் சிறுவை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஓயாது "முருகா, முருகா!" என எப்போதும் உச்சரித்து வாழ்ந்தார் முருகம்மையார். எப்போதும் 'முருகா' என இருப்பது பொறுக்காத முருகம்மையின் கணவர், ஒரு நாள் கடிதெனக் கோபம் கொண்டு முருகம்மையின் கையை வெட்டித் துண்டித்தார். உடன், 'முருகா' என்ற பெயரை என்றும் மறவா மாதொருத்தியான் முருகம்மையார் 'முருகா' எனப் புலம்பி அழுது வேண்ட உடன், "சிறுவை முருகன் துண்டித்த கையை முன்னிருந்தபடி சேர்த்து அருளினார்" என் சிறுவை நகர் குகன் படிகத்தில் திருவாமாத்தூர் தவத்திரு முருகதாச சுவாமிகள் கீழ்க்கண்ட பாடலில், சிறப்புறச் சொல்லி இருக்கிறார்.

"சேந்தன் குமரன் சிகரி தொறும் ஆடும்
திருத்தாளன் சிலைவேடன் திருமகளாம் வள்ளி
காந்தன், கடம்பன், காங்கேயன் கந்தன்
கணபதிசோ தரன் என்னக் கழறவுற்ற பலபேர்
வாய்ந்திருப்ப, 'முருகா' என்றொரு பெயரை மறவா
மாதொருத்தி கையை அவள் தணவன் வெட்டும் கொடிய
தீந்தமைக் குடனே முன்னிருந்த படி கைதழைக்கும்
திருவிளையாட் டினைச் செய்த சிறுவை நகர் குகனே!"

மேலே சொல்லப்பட்ட இதிகாச புராணச் சிறப்புக் களைக் காட்டிலும் இன்று கலியுகத்தில் பேசும் கடவுளாய்த் திகழ்வது அற்புதமானது.

இங்கு வரும் அடியவர்கள் பலருக்கு, வேண்டியதும் வீடு, வாகனம், தொழில், திருமணம் எனக் குடும்பம் சிறக்க கலியுகத்தில் உத்தரவு தந்து தானே உத்தரவாதமாகவும்

இருந்து சிறுவைச் சிறுவன் சிங்கார வேலன் விளையாடிய சித்து விளையாட்டுக்களை எழுதுவதற்கு இந்த சிறிய புத்தகம் போதாது.

சிறுவைச் சிறப்பு

(1) முருகம்மையார் கை தழைக்கச் செய்தது (2) தேவர் இருந்து அமுதுண்டது (3) தேவேந்திரப் பட்டணம் கிடைக்கப் பெற்றது (4) இந்திரனுக்கு இந்திரபதி கிடைத்தது (5) இலவன் - குசன் - இராமனின் அசுவத்தைக் கட்டிய இடம் (6) இராமனுடன் போரிட அதிகாரம் பெற்ற இடம் (7) இராமனுடன் - இலவன் - குசன் போரிட்டு சிறுவையை ஜெயமதாள நகராக்கியது. (8) அர்ச்சனைத் திருப்புகழ் பாடப் பெற்ற தலமானது (9) சிறப்புத் திருப்புகழ்கள் பாடப்பெற்ற தலமானது (10) ஐந்து பலன்களைத் தரும் ஒரே திருப்புகழ் கொண்ட கோவில் என்ற பெருமை (11) மரகதப் பச்சைக் கல்லில் செய்யப்பட்ட விக்கிரகங்கள் (12) கலியுகத்தில் பேசும் கடவுளாகத் திகழ்வது. **பன்னிரு கைவேலவன் சிறப்பும் பன்னிரண்டு.**

பிரார்த்தனை முறைகள்

"சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியான
தண் சிறுவை தனில் மேவு பெருமாளே!"

குளிர்ந்த சிறுவாபுரியில் நம் வரவை எதிர் நோக்கிக் காத்திருக்கும் பாலசுப்பிரமணிய சுவாமி எப்போதும் சிறுவைக் கோனை நினைக்கும் அடியவர் நினைப்பில் குடியிருக்கிறார் என்றாலும், சிறுவை முருகனை முனைந்து வேண்டியவர்க்கு இன்னும் நிறையப் பலன்களைத் தருவதற்குத் தயாராகக் காத்து இருக்கிறார் என்பதை. **"சிறுவை மேவி வர மிகுந்த பெருமாளே"** என அருணகிரிநாதர் சிறப்புறச் சொல்லி இருக்கிறார்.

சிறுவைக்கு ஏதாவது ஒரே ஒரு பிரார்த்தனையுடன் 6 வாரங்கள் வர வேண்டும். கிழமை, நேரம் மாறாமல் வர வேண்டும். ஞாயிற்றுக்கிழமை என்றால் ஆறு வாரமும் ஞாயிற்றுக்கிழமை தான் வர வேண்டும், அல்லது எந்தக் கிழமை வேண்டுமானாலும் விருப்பம் போல் வரலாம். ஆறு வாரமும் முதல் வாரம் வந்த கிழமையிலேயே வர வேண்டும். நேரம் : காலை - உச்சிக் காலத்திற்கு முன் - சாயரட்சை - இப்படி ஏதாவது ஒரு நேரத்தைத் தெர்ந்தெடுத்து, ஆறு வாரம் அதே நேரத்தில் வர வேண்டும். விடாமல் ஆறு வாரம் வந்து பிரார்த்தனை முடிக்க வேண்டும். பெண்கள் கோவிலிற்கு வர உகந்த நாட்களில் கிழமை - நேரம் மாறாமல் வந்து பிரார்த்தனையை முடிக்க வேண்டும். சிறுவைக் கோனை ஆறு வாரம் நடுவில் விடுப்பு இல்லாமல் தொடர்ந்து வந்து சேவித்து மணமாலை பெற்ற கன்னியர் ஏராளம்.

முதல் வாரம் முதல் ஐந்தாவது வாரம் வரை கொண்டு வர வேண்டிய பொருட்கள், தேங்காய் இரண்டு, வாழைப்பழம் இரண்டு, வெற்றிலை பாக்கு, பூச்சரம் அல்லது மாலை ஒன்று, எலுமிச்சம்பழம் இரண்டு.

ஆறாவது வாரம் மேற்கண்ட பொருட்களுடன் வசதிக்கேற்ப இரண்டு அல்லது ஐந்து அர்ச்சனைக்கான பொருள்களுடன் மாலை ஒன்று அதிகமாகக் கொண்டு வர வேண்டும். இயன்றவர்கள் அபிஷேகமும் செய்யலாம்.

ஒவ்வொரு வாரமும் அர்ச்சனை முடிந்ததும் அர்ச்சனைப் பிரசாதமும், ஒரு எலுமிச்சம்பழமும் குருக்கள் தருவார். எலுமிச்சம்பழ ரூபத்தில் நம் வீட்டிற்கு சிறுவை முருகன் வருகிறார். எனவே தினம் ஈரம் படாமல் பழத்துக்குப் பொட்டிட்டு, பூச்சூட்டி, சிறுவைக்கோனை வணங்கி, அண்டர்பதி திருப்புகழை ஆறு முறையும், மற்ற மூன்று திருப்புகழை ஒரு முறையும் மனமுருகப் படித்து, வீட்டிலுள்ள கனி வர்க்கங்கள் - கல்கண்டு - உலர்ந்த திராட்சை - பொங்கல் - சுண்டல் போன்றவற்றில் ஏதாவது ஒன்றை நைவேத்தியம் செய்து, தூப, தீபம் காட்டி விழுந்து வணங்கி, "உன்னை அன்றி வேறு யார் என்னைக் காத்து

அருள் செய்வார்?" என்ற உறுதியான எண்ணத்துடன் பிரார்த்தனை செய்து முடிக்கவும். இரண்டாவது வாரம் புதிய எலுமிச்சம்பழம் வந்ததும், பழைய எலுமிச்சம்பழத்தை கோவில் குளம், கிணற்றில் கால் படாதவாறு சேர்த்துவிட்டு, புதிய பழத்தை வைத்துப் பூஜை செய்ய வேண்டும். இரண்டாவது வாரம் பன்னிரண்டு முறை அண்டர்ப்பதி திருப்புகழையும், மூன்றாவது வாரம் பதினெட்டு முறையும், நான்காவது வாரம் இருபத்து நான்கு முறையும், ஐந்தாவது வாரம் முப்பது முறையும் ஆறாவது வாரம் முப்பத்தாறு முறையும் படிக்க வேண்டும் மற்ற மூன்று திருப்புகழை ஒரு முறை படித்து முடிக்க வேண்டும். நாள் தவறாமல் படிக்க வேண்டும். ஆறாவது வாரம் தரும் எலுமிச்சம்பழத்தை நம் பிரார்த்தனை நிறைவேறும் வரை பாதுகாத்து வைத்து இருந்து தினம் பூஜித்து வர வேண்டும். பிரார்த்தனை முடிந்ததும் முருகப் பெருமானை மறுபடியும் காண வர வேண்டும். அன்று ஆறு அர்ச்சனை செட்டுடன் மாலை இரண்டு, எலுமிச்சம்பழம் இரண்டு உடன் கொண்டு வர வேண்டும்.

இந்தக் கோவிலில் இரண்டு முருகப் பெருமான் சன்னிதிகள் உள்ளன. ஆதிமூலவர் சன்னதியில் நம் இடர், கஷ்டம், நஷ்டம், தேக்கம், தடங்கல், வில்லங்கங்கள், விக்கினங்களை நீக்கித் தர வேண்டிக் கொண்டு மூலவரிடம் நாம் பெற வேண்டிய பிரார்த்தனையை, வேண்டுகோளை கேட்டுப் பெற்றுச் செல்ல வேண்டும்.

ஆறு வாரம் வருபவர்கள் திருமணத்துக்காக வேண்டிக் கொண்டு வந்தால், வள்ளி மணவாளப் பெருமாளுக்கு அர்ச்சனை செய்து வர வேண்டும். ஆறாவது வாரம் மூன்று அர்ச்சனை கொண்டு வந்து இருந்தால், மரகத விநாயகர், மூலவர், வள்ளி மணவாளப் பெருமாள் மூன்று சன்னிதிகளில் அர்ச்சனை செய்ய வேண்டும். ஆறு அர்ச்சனை கொண்டு வந்து இருந்தால் மேலே கண்ட மூன்று சன்னிதிகளுடன் அண்ணாமலையார், உண்ணாமுலை, ஆதி மூலவர் என ஆறு சன்னிதிகளில் அர்ச்சனை செய்ய வேண்டும். வள்ளி மணவாளப் பெருமாள் சன்னிதியில் தரும் மாலையை அணிந்து

கொண்டு, "இதுவே என் திருமண மாலை! இதுவே என் திருமண மாலை!" என்று சொல்லிக்கொண்டு ஆறு முறை பிராகாரம் வர வேண்டும். மாலையை நல்ல முறையில் பாதுகாத்து வைத்து இருந்து, திருமணம் ஆனதும் தம்பதியர் இருவரும் சேர்ந்து ஆறு அர்ச்சனை, மாலை இரண்டு, எலுமிச்சம்பழம் இரண்டு உடன் கொண்டு வர வேண்டும். பழைய மாலையைக் கொண்டு வந்து கோவில் மரத்தில் கட்ட வேண்டும். அர்ச்சனை செய்து, பெற வேண்டிய பேறுகளை வேண்டிச் செல்ல வேண்டும்.

வீடு, தொழில், செல்வம், பிள்ளைப் பேறு மற்றவை வேண்டி வருபவர்கள், மூலவருக்கு அர்ச்சனை செய்து வர வேண்டும். ஆறாவது வாரம் மேலே எழுதியுள்ளபடி அர்ச்சனை செய்து மூலவரிடம் இருந்து பெறும் மாலையை "இதுவே என் வெற்றிமாலை, வெற்றிமாலை!" எனச் சொல்லி ஆறு முறை பிராகார வலம் வர வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் பிராகாரச் சுற்று முடிந்து சண்டிகேஸ்வரரிடம் "சுற்றும் ஆறு ஆயிற்று சுந்தரேசரையும் கண்டாயிற்று. என் வரவைக் கணக்காக்கிடுக!" எனச் சொல்லிக்கொண்டு, கால பைரவரிடம் "கோவில் சொத்து ஏதும் எடுத்துப் போகவில்லை" எனச் சொல்லி உத்தரவு பெற்று, கொடிமரத்துக்கு முன் வடக்கு நோக்கி (நவக்கிரக சன்னிதி நோக்கி) விழுந்து வணங்கிட வேண்டும். மறு முறை மூலவரைக் கண்டு நம் வேண்டுதலைப் பெற்றுச் செல்ல வேண்டும்.

கோவிலை விட்டுப் புறப்படுமுன் கொண்டு வந்துள்ள விடலைக் காயை (சூறைக்காயை) தரையில் சிவப்பு வர்ணம் பூசப்பட்ட இடத்தில் சூறை விட்டுப் போக வேண்டும். சூறை விடும் பொழுது "என் இடர்கள், கஷ்டங்கள், துன்பங்கள், விடலைக் காய் போல் சிதறி ஓட வேண்டும்" என்று வேண்டிக்கொண்டு உடைக்க வேண்டும்.

இந்த ஆறு வாரப் பிரார்த்தனையில் மிக முக்கியமான ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும் தினம் திருப்புகழ் பாடிப் பிரார்த்தனை செய்யும் - பத்து, பதினைந்து நிமிடங்களிலாவது மனத்தை அலைய விடாமல் ஒருநிலைப் படுத்தி முருகன் ஒருவனே சிந்தையாக, மனம் உருக,

கண்கலங்க, உறுதியாக, விடாப்பிடியாகத் தொடர்ந்து வேண்ட வேண்டும். கோவிலில் உள்ள நேரம் முழுவதும் "முருகா! முருகா!" என்று இருக்க வேண்டும். பிரார்த்தனை எத்துணை உறுதியாக இருக்கிறதோ, வலிமையாக இருக்கிறதோ, அத்துணை வேகமாக முருகன் பலனை அள்ளி அள்ளி வரமாகத் தருகிறார்.

இந்தக் கோவிலில் முதல் வாரத்திலேயே மணமாலை பெற்ற பெண்களும் உண்டு. இரண்டாவது, மூன்றாவது வாரத்தில் பலன் பெற்றவர்களும் உண்டு. சிலர் ஆறு வாரம் முடிந்த பின் பலன் பெற்றிருக்கிறார்கள். இன்னும் சிலர் பத்து, பன்னிரண்டு வாரங்களில் பலன் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொருவரின் பிரார்த்தனையில் ஈடுபாடு - உறுதி - வலிமை - நிலை பிறழாமை, - எண்ணம் சிதறாமை - மனமுருக வேண்டுவதைப் பொறுத்து, பலனை முன்போ, பின்போ பெறுகிறார்கள். உறுதியாகப் பலனைப் பெறுகிறார்கள் என்பதே கலியுகத்தில் பேசும் கடவுளாக சிறுவை முருகன் திகழ்வதைக் காட்டுகிறது. "சிறுவையில் உத்தரவு பெற்றவர்கள் தோற்றதே இல்லை" என உறுதியாகச் சொல்லலாம்.

ஆறு வாரம் பிரார்த்தனையாக வருபவர்கள் பலன் பெற்ற பின் அவர்கள் சக்திக்கேற்ப - அவர்கள் பெற்ற பலனுக்கு ஏற்ப ஒரு சிறு பகுதியை சிறுவைக் கோவில் மேம்பாட்டுக்கு - திருப்பணிக்கு அத்தியாவசியமான வசதிகளைச் செய்து தருவதற்கான பொருட்களாகக் கொடுப்பதென வேண்டிக் கொண்டு, வரமிகுந்த பெருமானிடம், சிறுவை பாலசுப்ரமணியனிடம் தினம் தினம் வரம் பெற வருக வருக என வேண்டிக் கொள்கிறேன்.

முருகா! முருகா!

சீதள வாரிஜ பாதா! சரணம்! சரணம்!

முருகா! பிறிதொருமுறை நான் உனைக் கண்டால், நான் என்னை நினையாதிருக்க வேண்டும்.

S. நாச்சியப்பன்

மயிலை சிறுவாபுரி பிரார்த்தனைக் குழு

அபிஷேகப் பொருள்களும், அருளும் பலன்களும்

தண்ணீர் அபிஷேகம்	:	மனசாந்தி
நல்லெண்ணை	:	பக்தி
சந்தனாதித் தைலம்	:	சுகம்
வாசனைத் திரவியம்	:	ஆயுள் வலிமை
மஞ்சட்பொடி	:	ராஜ வசியம்
நெய்	:	மோட்சம்
பஞ்சாமிர்தம்	:	தீர்க்காயுள்
தேன்	:	சங்கீத (இசை) வளமை
வாழைப்பழம்	:	பயிர் விருத்தி
மாம்பழம்	:	சகல வசியம்
பலாப்பழம்	:	உலக வசியம்
திராட்சைப்பழம்	:	பயம் நீங்குதல்
மாதுளம்பழம்	:	பகை நீக்கம்
தம்பரத்தம்பழம்	:	பூமி லாபம்
நாரத்தம் பழம்	:	நல்ல புத்தி
தேங்காய்த் துருவல்	:	அரசுரிமை
சர்க்கரை	:	பகையை அழித்தல்
பால்	:	ஆயுள் விருத்தி
தயிர்	:	சந்தான (மக்கள்) விருத்தி
இளநீர்	:	நல்ல புத்திரப் பேறு
கருப்பஞ்சாறு	:	சாஸ்திரத் தேர்ச்சி
அரிசிமாப் பொடி	:	பிறவிப் பிணி நீங்குதல்
பஞ்ச கவ்யம்	:	ஆத்ம சுத்தி, பாவ நிவர்த்தி
எலுமிச்சம்பழம்	:	யம பயம் நீக்கும்
நெல்லி முள்ளிப் பொடி	:	நோய் நீக்கம்
அன்னம்	:	ஆயுள், ஆரோக்யம், தேசம் அபிவிருத்தி
பச்சைக் கற்பூரம்	:	பயம் நீங்குதல்
விபூதி	:	ஞானம்
வஸ்திரம்	:	ராஜயோகம்
புஷ்பம்	:	மகிழ்ச்சி
சந்தனம்	:	செல்வம், சுவர்க்கபோகம்
கஸ்தூரி	:	வெற்றி உண்டாகுதல்
கோரோசனை	:	ஜபம் சித்திக்கும்
வலம்புரிச் சங்கு	:	தீவினை நீங்கும்
சொர்ணம் (தங்கம்)	:	வைராக்யம்
சஹஸ்ரதாரை	:	லாபம்
கும்பம் (ஸ்நபனம்)	:	அஸ்வமேதயாகப் பலன்

VR. பெரியண்ணன்
கற்பகாம்பாள் டிரான்ஸ்போர்ட்,
50, சிதம்பரம் சாமி,
2வது தெரு,
மயிலை,
சென்னை - 600 004.

V. கிருஷ்ணமூர்த்தி
ஸ்மைல்ஸ் இமேஜ்,
ஸ்கிரீன் பிரிண்டர்ஸ்,
226, இராயப்பேட்டை,
நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

S. முத்துராமன்
ஸ்ரீ சாஸ்தா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,
77, திருவள்ளுவர் சாலை,
தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.

K. கோபாலகிருஷ்ணன்
லேசர் பீப்பிள்ஸ்,
98, எல்.பி. ரோடு,
அடையாறு,
சென்னை - 600 020.

பாண்டியன் பேப்பர் கம்பெனி
35, ஆண்டர்சன் தெரு,
சென்னை - 600 001.

N. பூரணம்
29, அப்பு முதலி தெரு,
மயிலை,
சென்னை - 600 004.

Dr. வாசவன்
1/11, சத்தியமூர்த்தி நகர்,
நந்தனம்,
சென்னை - 600 035.


யுனைடெட் கலர் கிராபிகா (பி) லிமிடெட்
25, சையத்நூர் தெரு,
மவுண்ட்ரோட்
சென்னை - 600 002.

O. ஹரிஹரய்யா
19/3, அருண்டேல் தெரு,
மயிலை,
சென்னை-600 004.

இந்த புத்தகத்தின் நன்கொடையாளர்களுக்கு
நான் ஒன்றிச் சொன்னேன்
நன்றி, நன்றி, நன்றி.

S. நாச்சியப்பன்
மயிலை சிறுவாபுரி பிரார்த்தனைக் குழு

ROADS LEAD TO SIRUVAPURI



அச்சிட்டோர் :

யுனைடெட் கலர் கிராபிகா (பி) லிமிடெட்

25, சையத்நூர் தெரு, மவுண்ட்ரோட், சென்னை - 600 002.